# தாள விசித்ரா

மிருதங்க வித்வான் காரைக்குடி **ஸ்ரீ R. மணி**

தாள விசித்ராவின் சார்பில் எல்லோருக்கும் நமஸ்காரம். இன்று நீங்கள் கேட்க இருப்பது, தாள விசித்ரா என்ற ஒரு வழக்கமான தாள வாத்ய கச்சேரி. தற்கால வித்வான்களும், இளைய சமுதாயத்தினரும், தாளத்தில் பல விநோதங்களையும், விசித்ரங்களையும் செய்து வருவதால், இதற்கு தாள விசித்ரா என்ற பெயர் வழங்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியை தயாரித்து வழங்குகிறார் காரைக்குடி ஸ்ரீ R. மணி அவர்கள்.

தாள விசித்ரா பற்றிய அவரது விளக்கமும் அதனைச் சார்ந்த கருத்துக்களையும் அவர் கூறக் கேட்டு, அவருடைய மாணவனாகிய நான், அவற்றினை உங்கள் முன் படிக்க விழைகிறேன்.

இந்த ப்ரபஞ்சத்தில் முதலில் தோன்றியது ஓங்காரம். அதில் பிறந்ததே ரீங்காரம். **ரீங்காரத்தின் மறு பெயரே ஓசை. அந்த ஓசையில் தோன்றியதே இசை.** என்று இசை பிறந்ததோ, அன்று பிறந்தது **லயம்.** இசையை ஒரு படகுடன் ஒப்பிட்டால் அதை நடத்திச் செல்லும் நீரே, **லயம்.** இசை என்ற முகத்திற்கு இரண்டு கண்கள். ஒன்று சுருதி மற்றொன்று லயம். லயம் இல்லாத சுருதியோ, சுருதி இல்லாத லயமோ, ஒரு கண் இல்லாத முகத்திற்கு சமம். ஆகவே நமது பாரம்பரிய கர்நாடக இசையில் இசைக்கும், சுருதிக்கும், எந்த அளவு கௌரவம் இருக்கிறதோ அதே கௌரவம் லயத்திற்கும், அதனுல் இயங்கும் வாத்யங்களுக்கும் உண்டு.

தாள வாத்யங்கள் வாசிக்கும் முறை கடந்த 15 ஆண்டுகளில் மகத்தானதோர் முன்னேற்றப் பாதையை அடைந்துள்ளது. தாள வாத்ய வாசிப்பில், பழம்பெரும் சம்பிரதாய வழியில் வந்தவர்களும் கூட, காலப் போக்கில் புதிய அணுகுமுறைகளையும், புதிய யுக்திகளையும் கையாண்டு, பெரும் வெற்றி கண்டிருக்கிருர்கள்.

தூய்மையான புதுமைகள் என்றும் வரவேற்கப்பட்டிருக்கின்றன; வரவேற்கப்படவும் வேண்டும்.

**பொதுவாக**

கச்சேரிகளைக் கேட்கும் ரசிகர்களை, நான்கு வகையாகப் பிரிக்கலாம் :

ஒரு சிலர், பாட்டை மட்டும்
மறு சிலர், வயலினை மட்டும்
வேறு சிலர் மிருதங்கத்தை மட்டும்

ரசிப்பதோடு நிறுத்திக் கொள்கிருர்கள்.

கச்சேரிகளில், பாட்டு, வயலின், மிருதங்கம் இம்மூன்றை ஒன்ருக ரசிக்கத் தெரிந்தவர்களே பூரணமான ரசிகர்கள் ஆகிருர்கள்.

**வாழ்வில்**

உடல், உயிர் மற்றும் உணர்வு எவ்வளவு முக்கியமோ, அதுபோன்று,

**கச்சேரிகளில்**

பிரதான வித்வான்களும், லய வித்வான்களும் பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கிருர்கள்.

உடல், உயிர், உணர்வு இவற்றில் ஏதாவது ஒன்று விடுபட்டுப் போனுலும் அதற்கு மதிப்பு இல்லையோ, அதே போல்,

பிரதான வித்வான்கள் **இல்லாமல்** லயவித்வான்களோ அல்லது லயவித்வான்கள் **இல்லாமல்** பிரதான வித்வான்களோ ஒரு ஜீவனுள்ள கச்சேரியை அளித்துவிட முடியாது. ஒரு தனி மரம் தோப்பு ஆகி விட முடியாது. பல மரங்கள் சேர்ந்துதான் ஒரு அழகிய தோப்பாகும்.

**மேலும்**

லயவாத்யங்களை, பாட்டைப் போலவோ அல்லது மற்ற வாத்யங்களைப் போலவோ, எளிதில் புரிந்து கொள்ள முடிவதில்லை.

உதாரணத்திற்கு

ஒரு **தனி நபரின்** சொந்த சாகித்யங்களையோ அல்லது அவரின் சொந்த மெட்டுக்களையோ,

**மற்றவர்கள்** பாடும்போது அல்லது வாசிக்கும்போது, **இது இன்னாருடைய இசை** என்பதை

ரசிகர்கள் உடனே புரிந்துகொண்டு விடுகிறார்கள்.

அதேபோல, மிருதங்கத்தில், **ஒருவரின்** பாணியையோ அல்லது அன்னாருடைய கோர்வைகள் மற்றும் அவர்கள் வாசிப்பின் விசேஷ அமைப்புக்களை, **மற்ற மிருதங்கம் வாசிக்கும்** கலைஞர்கள் வாசிக்கும்போது, இது **இன்னாருடையது என்பதை,** எல்லா ரசிகர்களாலும் **எளிதில் அடையாளம் கண்டு கொள்ள முடிவதில்லை.**

இக்குறையை ஓரளவு தவிர்க்கவே ஒரே நேரத்தில், பல வித்யாசமான பள்ளிகளைச் சேர்ந்த லயக் கலைஞர்களை வாசிக்கச் செய்யும்போது, ரசிகர்களால், **உடனுக்குடன்** அந்த வித்யாசங்களை புரிந்துகொள்ள வழியாகிறது.

மேலும்,

மிருதங்கத்தில், ஒவ்வொரு பள்ளிக்கும் **தனி விசேஷத் தன்மை** உண்டு.

இந்நிலையில்,

1) பல லயக்கலைஞர்கள் ஒன்று சேர்வது,

2) ஒரே மேடையில் தோன்றுவது,

3) சகோதர வித்வான்கள்

என்றெல்லாம், எழுத்தளவிலும், பேச்சளவிலும் தான் நாம் கூறிக் கொண்டிருக்கிறோமே தவிர, செய்கை அளவில் |நாம் க்டைப்பிடிக்க முயல்வதில்லை.

அப்படியே இது நடந்தாலும், இவைகளை ஏதோ ஒரு நிர்ப்பந்தத்தில் செய்கிறோமே தவிர, உளமாற, மனமாற இதைச் செய்ய நாம் முயல்வதில்லை.

இந்நிலையைப் போக்கத்தான், தாள விசித்ரா பாடுபடுகிறது.

சங்கீத உலகில் பொதுவாக பாட்டிற்கும், வயலினிற்கும் எந்த அளவிற்கு ஒரு அந்தஸ்தும் கௌரவமும் இருக்கிறதோ, அதே கௌரவமும் அந்தஸ்தும் **மிருதங்கத்திற்கு,** பாலக்காடு ஸ்ரீ மணி அய்யர், பழநி ஸ்ரீ சுப்ரமணிய பிள்ளை மற்றும் ராமநாதபுரம் ஸ்ரீ முருகபூபதி இவர்களின் காலத்திலிருந்து கிடைத்திருக்கிறது.

இருப்பினும், இன்று நாம் கச்சேரிகளில், தனி ஆவர்த்தனம் ஆரம்பம் ஆகும்போது, சிலர் வெளியில் எழுந்து சென்று, தனி ஆவர்த்தனம் முடிந்தவுடன் திரும்பி வருவதை கண்கூடாகப் பார்க்கிறோம்.

இது, லயக் கலைஞர்களை அவமதிப்பது மட்டுமல்லாமல், தெய்வீக வாத்யமான மிருதங்கத்தையே அவமதிப்பதற்குச் சமமாகும்.

இனிவரும் காலங்களில் இந்த நிலை தொடராமல் இருக்க, சபாக்களும், ரசிகர்களும் பாடுபட வேண்டும்.

தாள விசித்ராவின் எல்லா நிகழ்ச்சிகளிலும், அதே கலைஞர்களே பங்கு கொள்வதில்லை. மாறாக, கர்னாடக சங்கீதத் துறையில் **முன்னேறி வரும்** சிறந்த பல இளம் கலைஞர்களை, நிகழ்ச்சிக்கு நிகழ்ச்சி மாறி மாறி பங்கு கொள்ளச் செய்வதாகும்.

இதனால், **முதிய** சமுதாயக் கலைஞர்களிடையே **அதிகம் காணமுடியாத** ஆழ்ந்த நட்பும், ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்ளும் மனப்பான்மையும் **இளைய** சமுதாயக் கலைஞர்களிடையே நிச்சயமாக வளர்ச்சி பெறும் என்பதில் ஐயமில்லை.

கலைஞர்களுக்குத் **தனித்தன்மை** இருக்க வேண்டும். தவிர, அவர்களிடம் **ஒற்றுமையும்** நிலவ வேண்டும்.

பல பள்ளிகளைச் சேர்ந்தவர்கள், ஒருவருக்கொருவர் தங்கள் அறிவையும், வாசிக்கும் முறையையும், நன்கு பகிர்ந்து கொள்ள வேண்டும்.

அப்போதுதான், நமது இசையும், கலையும் நன்கு தழைத்தோங்கும். தாள விசித்ரா இவற்றிற்கு ஒரு சிறந்த முதல் முன்னோடியாக விளங்குகிறது.